**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 13.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 2396/E/2018**

திரு அ.கனகராஜ் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
உத்தமபாளையம்,
தேனி மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 03.01.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 03.02.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 31.03.2018 |

******

**ஆணை**

இன்று (13.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு அ.கனகராஜ் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி கா.ரத்தினம், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 03.01.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் நில அளவை மற்றும் நிலவரித் திட்டத்

துறையால் Updating Registry Scheme (UDR)/நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின்கிழ் உருவாக்கப்பட்ட செட்டில்மென்ட் "A" Register/நிலவரித் திட்ட "அ" பதிவேடு முகப்புப் பகுதியில்/தலைப்புப் பகுதியில் ஏறக்குறைய 2 அல்லது 3 பக்கங்களில் இடம்பெற்ற Descriptive Memoir of Village/கிராம வரலாற்று விபரக் குறிப்பில் தெரிவிக்கப்பட்ட தகவலான கிராம மொத்த நிலப்பரப்பு, அது சார்ந்த சர்வே எண்கள்/பைமாஸ் எண்கள் மற்றும் கிராம இதர விபரங்கள் அடங்கிய மேற்படி ஆவணங்கள் தற்போதைய பெரியகுளம் வட்டாட்சியர் அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள ஒவ்வொரு வருவாய் கிராமம் வாரியாக அனைத்து வருவாய் கிராமங்களுக்குமான கிராம வரலாற்றுக் குறிப்புக்கள் அடங்கிய பக்கங்களின் நகலைத் தகவலாகக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், உத்தமபாளையம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 30.01.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக அவர் கோரிய நகல் பெறுவதற்கு உரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைச் சட்டப்பிரிவு 7(6)-ன்படி வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 03.02.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், உத்தமபாளையம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 23.02.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் முழுமையாக வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும், தகவல் வழங்கத் தவறிய பொது அதிகார அமைப்பினர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 31.03.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலுக்குரிய கட்டணத்தைச் செலுத்தி தகவலைப் பெற்றுக் கொள்ளுமாறு 30.01.2018 மற்றும் 23.03.2018 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக மேல்முறையீட்டாளருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் மேல்முறையீட்டாளர் உரிய கட்டணத்தைச் செலுத்தி தகவலைப் பெற்றுக் கொள்ளவில்லையென்றும் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. விசாரணையின்போது மேல்முறையீட்டாளர் பொதுத் தகவல் அலுவலரால் உரிய காலத்தில் தகவல் வழங்கப்படவில்லையென்றும், எனவே தான் கோரிய தகவலைச் சட்டப்பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணமின்றி வழங்க உத்திரவிடுமாறும் ஆணையத்தைக் கோரினார். மேல்முறையீட்டாளரின் வாதுரை குறித்துப் பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளர் கோரிய தகவலை 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்குவதாக ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**மேல்முறையீட்டாளர் 03.01.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 2396/E/2018</u>**
பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
உத்தமபாளையம்,
தேனி மாவட்டம்.

<u>மனுதாரர்</u>

திரு அ.கனகராஜ்,
த/பெ. ரா.அரசகுமார்,
நாடார் தெரு,
விளாத்திகுளம்,
தூத்துக்குடி மாவட்டம் - 628 907.

Copy to: Judgement File.
20/09/19